1981 மார்ச் 26]

திரு. பா. ரா. தாமஸ் : பல்கலைக் கழகங்களிலே அஞ்சல்வழிக் கல்வி இன்று நடத்தப்படுகிறது. முறைசாராக் கல்வியும் இந்த முறையில் நடத்தப் படுகிறதா ? இந்த முறையைக் காட்டி சில மாநிலங்கள் அதிக நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதாகக் கூறுகிறார்கள். நமது மாநிலத்தில் இத்தகைய முறை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அஞ்சல் வழிக் கல்வி என்பது இதிலே வருகிறது என்று தெரிகிறது. ஓப்பன் யூனிவர்சிட்டி என்பது முறைசாராக் கல்வி சார்புடையதாக இருக்கிறது. அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேட்டால் தரப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 169-க்கான மூல வினாவில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், தான் எஸ்.எஸ்.எல்.சி. என்று கொடுத்திருந்ததாகவும், அது தவறாக வந்திருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார். அவர் கையொப்பமிட்டுத் தந்திருப்பதிலே "டி.எஸ்.எஸ்.எல்.சி." என்றுதான் அவரே குறிப்பிட்டிருக்கிறார், ஆகவே அச்சுப் பிழையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்ட பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங்களில் பணியாளர்கள்.

* 171 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங்களுக்கு, பிற மாவட்டங்களிலுள்ள பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங்களுக்கு ஒதுக்குவது போன்றே, எழுத்தர் போன்ற பணியாளர்கள் ஒதுக்கப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அம்மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளே மிகுதியாக இருப்பதை முன்னிட்டு, அதிக எண்ணிக்கையில் எழுத்தர் தேவை என்பதனை அரசு உணர்ந்து நடவடிக்கை எடுக்குமா ?

(உ) ஆம் எனில், விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (இ) & (உ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு துவக்கப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் அதிக மிருப்பதால், அம்மாவட்டத்திலுள்ள பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங் களில், மற்ற மாவட்டத்திலுள்ள பள்ளித்துணை ஆய்வாளர் அலுவலகங்களில் உள்ள பணியிடங்களைவிட அதிகமான பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

[1981 மார்ச் 26

(முற்பகல்-9-40)

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் அனைத்தும் அரசுப் பள்ளிகளாக இருக்கின்றன. பள்ளித் துணை ஆய்வாளர் அந்தப் பள்ளிகளின் நிர்வாகியாகப் பணியில் இருப்பதால், அதிகப் பணியாளர்கள் தேவை என்று அவர்கள் எடுத்துச் சொன்னார். நான் அறிந்த வரையில், மற்ற மாவட்டங்களில் இருப்பதுபோன்றுதான் அங்கும் பணியாளர்கள் இருப்பார்கள் என்று கருதினேன். இந்தக் குறை அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகவும் அதைப் பற்றிப் பரிசீலித்து பணியிடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப் படுகிறது. அப்படி அளிக்கப்படாமல் இருந்தால், அந்தப் பணியிடங்கள் அளிக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள விவரப்படி அந்தப் பணியிடங்களில் உள்ளவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு: பள்ளித் துணை ஆய்வாளர் 1, உதவியாளர் 1, இளநிலை உதவியாளர் 1, ஏவலர் 1, நாகர்கோவில் சரகத்தில் இருப்பது பள்ளித் துணை ஆய்வாளர் 1, உதவியாளர் 1, இளநிலை உதவியாளர் 4, ஏவலர் 1, ஆக அங்கு கூடுதலாக 3 பேர்களைப் போட்டிருக்கிறார்கள். இது போன்று ஒவ்வொரு சரகத்திலும் கொஞ்சம் மாறுதலாக இருக்கிறது. ஒவ்வொரு சரகத்தில் ஒருவர் இருவராவது இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இப்போது பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கி, இந்த நிர்வாக அமைப்பில் கொஞ்சம் மாறுதல் வரலாம் என்பதை எதிர்பார்க்கலாம். அப்போது அந்தக் குறைபாடுகளைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதுபற்றியும் நிர்வாக அமைப்பிலே கொஞ்சம் மாறுதல் வரலாமென்பது பற்றியும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். வருகின்ற ஜூன் மாதத்தில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டால், பள்ளித் துணை ஆய்வாளர்கள் எண்ணிக்கையையும் அதிகமாக்கவேண்டியதாக இருக்கும். அவர்களுக்குக் கண்காணிப்பு வேலைகள் அதிகமாகும். அந்த அளவிலே வட்டார அளவிலே தாலுக்கா எஜுகேஷனல் ஆபிசர் பதவி ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கிறதா ?

1981 மார்ச் 26]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி ஆராய்ந்து சொல்ல நாம் ஒரு குழு அமைத்திருக்கிறோம். அவர்கள் அறிக்கை அளித்த பிறகு அந்த அறிக்கையின் அடிப்படையிலே செய்ய இருக்கிறோம். ஏதாவது மாறுதல் என்று இருக்கிறது. மாறுதல் வர வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தான் நான் இப்போது சுட்டிக் காட்டினேன்.

Full-time Watchmen in Aided High Schools

* 172 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Government have sanctioned a special allowance in lieu of House Rent Allowance to all Government Employees in rural areas with effect from 1st October 1979;

(b) whether it is being paid to teaching and non-teaching staff also working in Aided High Schools in such areas; and

(c) if so, the reason for the non-payment of the same to the full-time watchmen working in those schools?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) எல்லா முழு நேர சில்லரைச் செலவினப்பணியாளர்கட்கும் இச் சிறப்பூதியம் வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளதால், தனியார் பள்ளிகளில் பணிபுரியும் எல்லா முழுநேர இரவுக் காவலர்கட்கும் சிறப்பூதியம் வழங்கப்படுகிறது.

குடும்பநலத் திட்டத்தின் கீழ் ரூ. 10,000 வழங்குதல்.

* 173. வினா.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மத்திய சிறையில், நீண்டகால சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களில், இறந்துபோன அரசுப் பணியாளர்களின் வாரிசுகள் என்கிற வகையில், தமிழக அரசின் குடும்பநலத் திட்டத்தின்கீழ் வழங்கப் படும் ரூ. 10,000 த்தைக் கோரியுள்ளவர்கள், எத்தனை பேர் ?

(இ) இவர்களது மனுக்கள் கொடுக்கப்பட்ட தேதிகள் யாவை?

(உ) இவர்களது மனுக்கள் தற்பொழுது எந்நிலையில் உள்ளன ?